21st November 1963]

புதிய ரயில் நிலேயம்

ரயில் நிலேயத்தை நிறுவ, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்துள்ளதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இல்லே.

திரு. இரா. நாராயணன் : மாத்தூருக்கும், பெண்ணுடைத்திற்கும் இடையில் இரண்டு வெள்ளாறுகள் போவதனுல் போக்குவரத்து வசதியின்றி மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். கடந்த ஐந்து வருஷங்களாக இந்தக் கோரிக்கையை மக்கள் போட்டு வந்தும் ஒன்றும் நடக்கவில்லே. இனிமேலாவது மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லி இந்த வசதியை ஏற்படுத்திக்கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : இனிமேல் இதைப்பற்றி உதவி செய்யவேண்டுமென்ருல் கனம் அங்கத்தினர் இதுபற்றிய விவரத்தை அரசாங்கத்திற்கு எடுத்து எழுதி அனுப்பினுல் அதைக் கவனித்து அரசாங்கம் ஆவன செய்யும்.

Legislative Council (Teachers' Constituency)

* 391 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that the Secondary Grade Teachers in the Elementary Schools are not entitled to exercise their franchise for the election of members to the Legislative Council representing Teachers' Constituency; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(b) There is no provision in the Election Law.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள், உயர்நிலேப் பள்ளி, ஆரம்பப்பள்ளி உபாத்தியாயர்கள் ஆகியவர்களின் பணிகள் ஒன்றே ஆதலால் ஆரம்பப் பள்ளியில் பணியாற்றி வரும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் வோட்டுரிமை கொடுக்க அரசாங்கம் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அரசாங்கத்தைப் பொருத்த வரையிலும் இப்போது இருக்கிற சட்டத்தை மாற்றுவதாக இல்லே.

* 392 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆரம்பப்பள்ளி ஆசிரிய, ஆசிரியைகளேயும், ஆசிரியர் தொகுதிக்கான வாக்காளர்களாக பதிவுபெறச் செய்யும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.